திருக்கிறோம் என்பதை நேற்றே விவரமாகச் சொல்லியிருக்கிறேன். வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது நிரந்தரமாக எதிர்காலத்தில் வெள்ளத் தடுப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப இந்தப் பகுதியினுடைய குறைகள் களையப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 656, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

656—

பழுதடைந்த குடிநீர் குழாய் சீர்செய்தல்.

*1525—திரு. வே. தம்புசாமி:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நாகப்பட்டினம் வட்டம், நாகப்பட்டினம் ஒன்றியத்தில் உள்ள எட்டுக்குடி ஊராட்சிக்கு வரும் குடிநீர்க் குழாய் பழுதடைந்து குடிநீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், நாகப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த எட்டுகுடி ஊராட்சிக்கு வரும் குடிநீர் குழாய் தற்போது நல்ல நிலையில் தடையின்றி குடிநீர் வழங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேயிருந்து நீரேற்றக்கூடிய அந்தக் குழாய் ஆழ்குழாயாக அமைந்திருக்கிற காரணத்தால் பூமிக்கு அடியில் இருக்கிற பாகங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு, காலத்தில் சீர் செய்யப்படாமல் குடிதண்ணீர் விநியோகம் பல மாதங்களாக நடைபெறாமல் தடைபடுகிறது. ஆகவே, அந்த ஆழ்குழாய் கிணறுகள் என்பதை மாற்றி கேணியாக போட்டு அதன் மூலம் நீரேற்றுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு பரிசீலனை செய்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நன்றி. ஆனால் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால், கோடைக்காலம், தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிற நேரம். ஆகவே, விரைவாக பரிசீலலித்து கேணி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எட்டுக்குடியிலே ஓராண்டுக்கு முன்னால் ஒரு கேணி கட்டப்பட்டு இன்னமும் அந்த கேணிக்கு பம்புசெட்டுகள் கட்டாமல் தண்ணீர் விநியோகிக்கப்படாமல் அப்படியே அந்த தண்ணீர் கெட்டுப் போயிருக்கிறது. அதையும் சுத்திகரித்து விரைவாக நீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டுக்குடி பகுதியைச் சேர்ந்த கிராம மக்களுக்கு நல்ல குடி தண்ணீர் வழங்குவதற்கு இந்த அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்து விரைவாக அந்தப் பணியை முடிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 657, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

657—

பொய்த்த கிணறுகளுக்கு கடன் தள்ளுபடித் திட்டம்.

*4443—திரு. நா. சா. பழனிசாமி:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா:

பொய்த்த கிணறு கடன் தள்ளுபடித் திட்டம் சரியான முறையில் அமுல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கிகளால் பொய்த்த கிணறுகள் நிதித்திட்டம் சரியான முறையில் அமுல்படுத்தப் பட்டு வருகிறது. 1—4—1968 முதல் 30—9—1991 வரை இத்திட்டத்தின் மூலம் 3194 விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது. அதனுடைய மொத்தம் ரூ. 220.37 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.